**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 3, தஞ்சாவூர்**

**முன்னிலை-திருமதி.எஸ்.தங்கமணி, பி.ஏ.எம்.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண் 3, தஞ்சாவூர்.**

**எம்.சி. எண் 1/2017**

**ம.சா.1 கனகா என்பவரின் சாட்சியம்**

**நாள்- 09.02.2019**

கு.வி.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

என் பெயர் கனகா. என் கணவர் பெயர் முத்துகுமார். நான் புதுக்குடி, சமத்துவபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.

எதிர்மனுதாரர் முத்துகுமார் என்னுடைய கணவர் இல்லை என்றாலும், அவரிடமிருந்து பணம் மற்றும் சொத்துக்களை பறிப்பதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சமத்துவபுரம் எனது சொந்த ஊர் இல்லை. என் தாயார் பிறந்த ஊர் திருவிழாப்பட்டி ஆகும். முத்துகுமாரின் மனைவி என்று நான் கோரும் சட்ட தகுதி எனக்கு இல்லை என்றாலும், முத்துகுமாரிடமிருந்து ஜீவனாம்சம் கோரும் தகுதி எனக்கு இல்லை என்றாலும் சரியல்ல. திருவையாறு மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் முத்துகுமார் கல்யாணம் செய்து கொள்வதாக சொல்லி ஏமாற்றினார் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி புகார் கொடுத்தபோது கற்பமாக இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு பதிவு செய்து முத்துகுமார் சிறைக்கு சென்றபிறகு எனக்கு குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அதன்பிறகு திருவையாறு நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முத்துகுமாருக்கு தண்டனை என்று தீர்ப்பு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் 2010 ஆம் வருடம் புகார் கொடுத்தேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.2-ற்கு உண்டான குறுந்தகடு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிலில் கொடுத்ததாக சொல்லப்படும் ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ரசீதை எதிர்மனுதாரர் முத்துகுமார் தான் வைத்துள்ளார். மேற்படி

ரசீதிற்கு நாங்கள் நகல் பெற்று தாக்கல் செய்யவில்லை. மேற்படி ரசீதை முத்துகுமார் வைத்துள்ள விபரத்தை நான் கொடுத்த மனுவிலும், காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும், திருவையாறு நீதிமன்றத்தில் செய்யப்பட்ட விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளவாறு எவ்வித ரசீதும் வழங்கப்படவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக ரசீது வழங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

(ஒப்பம்/-திருமதி.எஸ்.தங்கமணி)

நீதித்துறை நடுவர் எண் 3,

தஞ்சாவூர்.